| புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்<br>வினாக்களும் விளக்கங்களும் | |
|---|---|
| 1.நீட்ஸ் திட்டத்தில் பயனாளிகள் யார்?<br><br>1. Who are the beneficiaries? | முதல் தலைமுறை தனிநபர் தொழில்முனைவோர் (உரிமையாளர்) அல்லது முதல் தலைமுறை தொழில்முனைவோர் அடங்கிய பங்குதாரர் கூட்டு<br><br>First Generation Individual Entrepreneur (Proprietorship) or Group of entrepreneurs (Partnership), provided that all members of the partnership should be First Generation Entrepreneurs |
| 2 தொழில்முனைவோர்கூட்டினால் முன்மொழியப்படும் தொழில்திட்டம் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறக் கருதப்படுமா?<br><br>2. Whether partnership projects are considered under this scheme? | ஆம், நீட்ஸ் திட்ட அரசாணையின்படி தகுதிவாய்ந்த பங்குதாரர்களை கொண்ட தொழில்முனைவோர் கூட்டினால் முன்மொழியப்படும் தொழில்திட்டம் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறக் கருதப்படும்<br><br>Yes, subject to the condition that eligibility criterion as prescribed in the NEEDS G.O. is fulfilled by each and every individual of those entered into the partnership deed, partnership concerns may be considered for assistance under this scheme. |
| 3.நீட்ஸ் திட்டத்தில் விண்ணப்பிக்க வயது வரம்பு என்ன?<br><br>3. What is the age limit to apply under NEEDS? | பொது பிரிவு தொழில்முனைவோர்கள் 21 வயது அடைந்தவராகவும் 35 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.<br>பெண்கள்,திருநங்கையர்கள், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினர்,சிறுபான்மையினர்,முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களுக்கு அதிகபட்ச வயதுவரம்பு 45 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.<br><br>For General Category, minimum age is of 21 years, maximum of 35 years<br>For Special Category viz...Women, Transgender, BC, MBC, SC/ST, Minority, Ex-servicemen and Physically Challenged, the maximum cap is enhanced to 45 years. |
| 4. தமிழ் நாட்டை சாராதவர்கள் நீட்ஸ் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தொழில் துவங்க முடியுமா? | முடியாது. தமிழ்நாட்டில் குறைந்தது 3 ஆண்டுகள் வசித்து வருபவராக இருத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| 4. Anyone residing outside Tamil Nadu State can start business in Tamilnadu under NEEDS? | No, the applicant should be a resident of Tamilnadu State for not less than 3 years. |
| 5.தமிழ் நாட்டைசேர்ந்தவர்கள் நீட்ஸ் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு பகுதியில் தொழில் துவங்க முடியுமா?<br><br>5. Anyone residing in Tamil Nadu can start business anywhere in Tamilnadu under NEEDS | முடியும். எடுத்துக்காட்டாக கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த தொழில்முனைவோர் சென்னை மாவட்டத்தில் அல்லது மறுதலையாக தொழில் துவங்கலாம்.<br><br>Yes, In such a case, for example, a resident of Kanyakumari District can start an enterprise in Chennai District and vice versa. |
| 6.நீட்ஸ் திட்டத்தின் கீழ் கடனுதவிகள் பெற வருமான உச்ச வரம்பு ஏதேனும் உள்ளதா?<br><br>6. Is there any income ceiling to get assistance under NEEDS? | இல்லை. நீட்ஸ் திட்டத்தின் கீழ் கடனுதவிகள் பெற வருமான உச்ச வரம்பு ஏதும் இல்லை.<br><br>No. There is no family income ceiling prescribed for assistance for setting up projects under this scheme. |
| 7. திட்ட மதிப்பு என்றால் என்ன?<br><br>7. What is Project Cost? | மூலதன செலவுகள் மற்றும் நடைமுறை மூலதனத்திற்கான விளிம்பு தொகை ஆகியவற்றின் கூட்டுத் தொகையே திட்ட மதிப்பாகும்.<br><br>Project cost is the sum of Capital Expenditure and Margin Money for working capital. |
| 8.மூலதன செலவுகள் என்றால் என்ன?<br><br>8. What is Capital Expenditure? | தொழில் துவங்க உள்ள நிலத்தின் மதிப்பு, கட்டிட மதிப்பு மற்றும் இயந்திர தளவாடங்களின் மதிப்புகளின் கூட்டுத் தொகையே மூலதன செலவுகள் ஆகும்.<br><br>Capital Expenditure will generally include investment on Land, Building and Plant & Machinery only. |
| 9. தொழில் துவங்க உள்ள இடத்தின் மதிப்பு திட்ட மதிப்பில் சேருமா?<br><br>9. Whether cost of land can be included in the project cost? | சேரும். கடன் விண்ணப்பிக்கும் தேதியில் தொழில் துவங்க உள்ள இடத்தின் வழிகாட்டு மதிப்பு அல்லது சந்தை மதிப்பு இதில் எது குறைவோ அது திட்ட மதிப்பில் சேரும்.<br><br>Yes. Cost of the land may be included in the Project cost at guideline value or market value, prevailing as on the date of filing of loan application, whichever is lower. |

| | |
|---|---|
| 10. தொழில் துவங்க உள்ள கட்டடத்தின் மதிப்பு திட்ட மதிப்பில் சேருமா?<br><br>10. Whether cost of building can be included in the project cost? | சேரும். தொழில் துவங்க உள்ள இடத்தில் கட்டப்படும் அலுவலகம், பணிமனை, சோதனைக்கூடம் போன்ற கட்டடங்கள் கட்ட ஆகும் மொத்த செலவு திட்ட மதிப்பில் 25 விழுக்காட்டிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br><br>Yes, Cost of construction of buildings such as Office, Work-Shed / Workshop, Laboratory etc., may be included in the project cost subject to the condition that the cost of building shall not exceed 25% of the total project cost. |
| 11.குத்தகை / வாடகை இடத்தில் தொழில் துவங்கினால் இக்கட்டடத்தின் மதிப்பு திட்ட மதிப்பில் சேருமா?<br><br>11. Whether cost of leased/rental building can be included in the project cost? | 11.சேராது. குத்தகை / வாடகை இடத்தில் தொழில் துவங்கினால் அக்கட்டடத்தின் மதிப்பு திட்ட மதிப்பில் சேராது.<br><br>No, the cost of leased/ rental building shall not be included in the Project cost. |
| 12.இத்திட்டத்தில் அதிகபட்ச மான்யம் எவ்வளவு?<br><br>12. How much maximum subsidy is available under this scheme? | திட்ட மதிப்பில் 25 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை மான்யம் கிடைக்கும்.<br><br>25% of the eligible components of the project cost subject to maximum amount of Rs.25.00 lakhs. |
| 13. .இத்திட்டத்தில் மான்ய தொகை கணக்கிட என்னென்ன கூறுகள் / தொகைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்?<br><br>13. What are the components which are taken into consideration while calculating the subsidy? | தொழில் தொடங்க உள்ள இடத்தின் மதிப்பு, கட்டிட மதிப்பு மற்றும் இயந்திர தளவாடங்களின் மதிப்புகளின் கூட்டுத் தொகையான திட்ட மதிப்பில் 25 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.25 லட்சம் மான்யம்.<br>❖ கட்டட மதிப்பு திட்ட மதிப்பில் 25 விழுக்காட்டுக்கு கூடுதலாக இருக்க கூடாது.<br>❖ சேவை தொழிலாக இருப்பின் இயந்தர தளவாடங்களின் மதிப்பு திட்ட மதிப்பில் 25 விழுக்காட்டிற்கு மேல் இருக்க வேண்டும்.<br><br>25 % of the project cost (cost of the land, building and Plant and Machinery) subject to the maximum cap of Rs.25.00 lakhs.<br>❖ Building cost should not exceed 25% of project Cost &<br>❖ Equipments value should exceed 25% of the project Cost for service entity |

| | |
|---|---|
| 14. தொழில்முனைவோர் கூட்டில்  அடங்கிய அனைவரும் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டுமா?<br><br>14. In partnership projects, is it mandatory for all the partners to attend the EDP training? | இல்லை. மற்ற பங்குதாரர்களால் ஏற்றுக்கொள்ளபட்ட ஒருவருக்கு மட்டுமே தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்<br><br>No, EDP training will be provided to only one of the partner who should be authorized by other partners in such cases. |
| 15. தொழில்முனைவோர் அடங்கிய கூட்டில் ஒருவர் பொது பிரிவினராக இருப்பின் சொந்த முதலீடு எவ்வளவு செலுத்த வேண்டும்?<br><br>15. In partnership projects, what is the owner contribution if one of the partner(s) belongs to General category? | தொழில்முனைவோர் அடங்கிய கூட்டில், சொந்த முதலீடு செய்வது குழுவின் அதிகபெரும்பான்மை எப்பிரிவினர் உள்ளனரோ அதை பொருத்து அமையும். எடுத்துக்காட்டாக ஒரு பொது பிரிவினர் மற்றும் ஒரு சிறப்பு பிரிவினர் ஆக இருவர் அடங்கிய தொழில் திட்டத்திற்கு  பொது பிரிவினர் செலத்த வேண்டிய சொந்த முதலீட்டை செலுத்த வேண்டும். அதே போன்று  ஒரு பொது பிரிவினர் மற்றும் இரண்டு சிறப்பு பிரிவினர் ஆக மூன்று பேர்கள் அடங்கிய தொழில் திட்டத்தில் சிறப்பு பிரிவினர் செலுத்த வேண்டிய சொந்த முதலீட்டை செலுத்த வேண்டும்.<br><br>Owner’s contribution depends on majority of partners involved in the project. For instance, in a unit of two partners involved, one belongs to General category and other one from Special Category, and then the contribution will be as applicable for General category. For instance, if a unit has three partners one belongs to General category and other two from Special Category, then the contribution will be as applicable for Special category. |
| 16.இத்திட்டத்தில் மான்யம் என்பது தொழில் துவங்கி வங்கி கடன் செலுத்த துவங்கும்பொழுதே பெற்றுக்கொள்ளும் தொகையா? அல்லது வங்கி கடன் முழுவதையும் திரும்ப செலுத்தி முடித்தபின் பெற்றுக்கொள்ளும் தொகையா? | இத்திட்டத்தில் மான்யம் என்பது தொழில் துவங்கி வங்கி கடன் செலுத்த துவங்கும்பொழுதே பெற்றுக்கொள்ளும் தொகையாகும்.<br>❖ 50 லட்சத்திற்குள் துவங்கப்படும் திட்டத்திற்கு தகுதியான மான்ய தொகையில் 50 விழுக்காடு வங்கியில் இருந்து முறையான கடன் ஒப்பளிப்பு ஆணை தரப்பட்டவுடன் வழங்கப்படும். மீதமுள்ள 50 விழுக்காடு மான்யம் தொழில் துவங்கியமைக்கான மூலதன முதலீடு செய்யப்பட்டுள்ளதை ஆய்வு மேற்கொண்ட பிறகு வழங்கப்படும். |

| | |
|---|---|
| 16. Is it front ended or back ended Individual based subsidy under NEEDS? | ❖ 50 லட்சத்திற்கு மேல் துவங்கப்படும் திட்டத்திற்கு தகுதியான மான்ய தொகையில் 50 விழுக்காடு வங்கியில் இருந்து கடன் பட்டுவாடா செய்தவுடன் வழங்கப்படும். மீதமுள்ள 50 விழுக்காடு மான்யம் இரண்டு தவணையாக தலா 25 விழுக்காடு அளவில் தொழில் துவங்கியமைக்கான மூலதன முதலீடு செய்யப்பட்டுள்ளதை ஆய்வு மேற்கொண்ட பிறகு வழங்கப்படும்.<br><br>It is front ended subsidy.<br>❖ For project costs upto Rs.50.00 lakhs, 50% of eligible subsidy will be sanctioned on actual sanction of loan and 50% balance eligible subsidy later after verifying the capital expenditure actually incurred by the beneficiary.<br>❖ For project costs above Rs.50.00 lakhs, 50% on actual sanction of loan and 25% each later after verifying the capital expenditure actually incurred by the beneficiary.<br>❖ |
| 17.நீட்ஸ் திட்டத்தில் ஒரு தனி நபர் விண்ணப்பிக்க தகுதிகள் என்ன?<br><br>17. What are the eligibility criterias for an individual to apply under NEEDS? | 17. விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளில் உரிய தகுதிகள் குறித்து விளக்கப்பட்டுள்ளது.<br><br>Please refer ‘Instructions to applicants’. |
| 18.தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி முடிக்கும் முன்னரே மான்யம் பெற இயலுமா?<br><br>18. Before completion of EDP training can an individual claim subsidy? | இயலாது. இத்திட்டத்தில் கடன் ஒப்பளிப்பு பெற்றவர் தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி முடிக்க வேண்டும். சொந்த முதலிட்டை வங்கியில் செலுத்த வேண்டும்.வங்கியாளர்களால் கடன் பட்டுவாடா செய்யப்பட வேண்டும். அதன்பிறகே கடன் பட்டுவாடா செய்தமைக்கான ஆவணங்களுடன் வங்கியாளர்களால் மான்யத்திற்கான கோரிக்கை பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம் / மண்டல இணை இயக்குநர், சென்னைக்கு அனுப்பப் பட வேண்டும்.<br><br>Not possible. He / She should complete EDP training, deposit his/her own proportionate contribution of the project cost in his account. Bank has to release the Term Loan subsequent claim(s) has to be |

| | |
|---|---|
| | send to GM,DIC/RJD,Chennai along with the disbursement advices. |
| 19.எந்தமாதிரியான சூழ்நிலையில் வங்கியில் இருந்து கடன் பெற கூட்டு ஈட்டுறுதி ஆவணங்களை ஒப்படைக்க வேண்டும்?<br><br>19. Under which circumstance collateral security is needed? | வங்கியில் இருந்து கடன் பெற பெற கூட்டு ஈட்டுறுதி ஆவணங்களைத் தருவதென்பது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்/ தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழக வழிகாட்டு நெறிமுறைகளைப் பொறுத்தமையும். உரிய தகுதிப்பாடுகளுக்குட்பட்டு கடன் பற்றுறுதி நிதியத் திட்டத்தின் கீழ் ஈட்டுறுதி இல்லாமலும் கடன் வழங்கப்படும்<br><br>Collateral security will be decided as per Bank / Tamil Nadu Industrial Investment Corporation Limited (TIIC) guidelines. Subject to applicability, loans may also be covered under Credit Guarantee Fund Trust Scheme for Micro and Small Enterprises (CGT-MSE) of Government of India. |
| 20. தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கான பெறப்படும் கடன் தொகைக்கு தேசிய மையமாக்கப்பட்ட வங்கிகள்/ தமிழ்நாடுநாடு தொழில் முதலீட்டு கழகத்தால் நிர்ணயிக்கபட்டுள்ள வட்டி விகிதம் என்ன?<br><br>20. What is the rate of interest for the Enterprises financed by TIIC/Banks? | தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்/ தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தால் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு என நிர்ணயிக்கபட்டுள்ள வட்டி விகிதப்படி அமையும்<br><br>Enterprises financed by TIIC/Banks will be charged at the rate of interest applicable to Micro & Small enterprises as per banking norms. |
| 21.நீட்ஸ் திட்டம் குறித்த விளக்கவுரைகளை எந்த ஆவணங்கள் மூலம் விரிவாக தெரிவிந்து கொள்ளலாம்?<br><br>21. To know more about the scheme especially on the guidelines, where to refer? | இணையதளம் www.indcom.tn.gov.in –ல் உள்ளஅரசாணைஎண்: 49 குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை நாள்:29.10.2012 அல்லது இணையதள முகப்பில் உள்ள FAQ ல் சென்று தெரிந்து கொள்ளலாம்.<br><br>Please refer to G.O.Ms.No.49, MSME (D2) Department, dated : 29.10.2012 in the website www.indcom.tn.gov.in (or) FAQ menu in the home page of this website. |
| 22. ஒரு மாத கால தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி கட்டாயமானதா?<br><br>22. Whether 1 month EDP Training is compulsory? | ஆம். ஒரு மாத கால தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி கட்டாயமானது.<br><br>Yes, it is mandatory. |

| | |
|---|---|
| 23.நீட்ஸ் திட்டத்தில் விண்ணப்பிக்கும் முன்னரே ஒரு மாத கால தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியை சென்னை தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி மையத்தால் பெற்றிருப்பின் மீண்டும் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்கு பெறலாமா?<br><br>23. If an entrepreneur completed equivalent EDP training sponsored by EDI, MSME-DI, Banks before applying under NEEDS, then he/she can avail exemption from regular 1 month mandatory EDP training? | பெறலாம். மீண்டும் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்கு பெறலாம்.<br><br>Yes, he/she can avail exemption from regular 1 month mandatory EDP training. |
| 24.இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள் யாவை?<br><br>24. Which are the financial agencies? | அனைத்து வணிக வங்கிகளும், மண்டல கிராமபுற வங்கிகள், இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி , தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் மற்றும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி ஆகியன இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள் ஆகும்.<br><br>All Commercial banks including Regional Rural Banks (RRB), Small Industries Development Bank of India (SIDBI), Tamil Nadu Industrial Investment Corporation Limited (TIIC Ltd) and Tamil Nadu Industrial Co-operative Bank (TAICO). |
| 25.ஒரு திட்டத்திற்காக இரு வேறு நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெற முடியுமா?<br><br>25. Can project be financed jointly from two different finance sources? | முடியாது. ஒரு நிதி நிறுவனம் மூலம் மட்டுமே பெற முடியும்.<br><br>No, it is not possible. |
| 26.ஏற்கனவே நடைமுறையில் செயல்பட்டுகொண்டுள்ள தொழில் நிறுவனம் இத்திட்டத்தின் மூலம் மானிய உதவி பெறமுடியுமா?<br><br>26. Whether existing unit can avail subsidy under NEEDS? | முடியாது. முதல் தலைமுறை தொழில்முனைவோரால் புதிதாக துவங்கப்பட இருக்கும் திட்டத்திற்கு மட்டுமே மானிய உதவி பெற முடியும்.<br><br>No, only new unit being promoted by new First Generation Entrepreneur is eligible for assistnce. |
| 27.ஒரு தொழில்முனைவோர் ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களை விண்ணப்பிக்க முடியுமா?<br><br>27. Whether an entrepreneur can submit more than one project? | முடியாது. ஒரு தொழில்முனைவோர் ஒரு திட்டத்திற்காக மட்டுமே விண்ணப்பிக்க முடியும்<br><br>No, only one project could be submitted. |

| | |
|---|---|
| 28.இரண்டாவது கை இயந்திரங்கள்/ பழைய இயந்திரங்கள் இத்திட்டத்தில் கொள்முதல் செய்ய தகுதிவாய்ந்ததா?<br><br>28. Whether second hand machinery would be considered eligible for assistance? | இல்லை. புதிய இயந்திரங்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். . இருப்பினும் இரண்டாவது கை இயந்திரங்கள்/ பழைய இயந்திரங்கள் நேரடியாக இறக்குமதி செய்து நிறுவினால் இத்திட்டத்தில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.<br><br>No, only new machinery will be considered eligible. However, second-hand machinery, directly imported by the entrepreneur would also be considered eligible for assistance. |